**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (19.3.2018) சட்டப்பேரவையில், தேனி வனக் கோட்டம், கொட்டக்குடி காப்புக் காட்டில் (குரங்கணி பகுதியில்) ஏற்பட்ட தீ நிகழ்வு தொடர்பாக விளக்கம் அளித்தார்கள்.**

---

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

2014–15ஆம் ஆண்டில் **தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டத்தின்** (Tamil Nadu Biodiversity Conservation & Greening Project) கீழ் முதுவாக்குடி பழங்குடியினரின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்கத்தின் ஒரு பகுதியாக **சூழலியல் மேம்பாட்டுக் குழு** அமைத்து, சமுதாயம் சார்ந்த சூழலியல் சுற்றுலா (Community Based Eco Tourism) தொடங்க, 11.4 கிலோ மீட்டர் நீளத்திற்கு, 7 முதல் 10 அடி அகலம் கொண்ட ஒரு மலையேற்றப் பாதை அமைக்கப்பட்டது. இந்த மலையேற்றப் பாதை, போடி சரகத்திலுள்ள கொட்டக்குடி காப்புக்காட்டில் உள்ளது. குரங்கணியில் தொடங்கும் இந்த மலையேற்றப் பாதை தமிழ்நாடு–கேரளா மாநில எல்லையில் உள்ள Top Station வரை செல்கின்றது. இப்பாதையின் மையப் பகுதி மற்றும் Top Station பகுதிகளில் இவ்வனப்பகுதியை நன்கு அறிந்த பழங்குடியினர், சூழலியல் மேம்பாட்டுக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு, இப்பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உதவி புரிகின்றனர்.

சுற்றுலாப் பயணிகள் குரங்கணியிலிருந்து Top Station வரை செல்வதற்கும், கேரளா மாநிலப் பகுதிகளிலிருந்து Top Station வழியாக குரங்கணி வருவதற்கும் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 200 ரூபாய் வீதம் நுழைவுச் சீட்டு பெற்று செல்ல வேண்டும். இந்தத் தொகையானது சூழலியல் மேம்பாட்டு குழுவின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, முதுவாக்குடி பழங்குடியினரின் நலனுக்காக பயன்படுத்தப்படுகிறது.

10.3.2018 அன்று ஈரோடு மற்றும் திருப்பூர் பகுதியினை சார்ந்த 12 நபர்கள் கொண்ட குழு ஒன்று, குரங்கணிக்கு வந்துள்ளது. அன்றைக்கே

குரங்கணியிலிருந்து Top Station செல்வதற்கு சூழலியல் மேம்பாட்டு குழுவிலிருந்து 12 நுழைவுச் சீட்டுகள் பெற்று சென்றுள்ளனர். ஆனால், இக்குழு மேற்காணும் பகுதிக்கு செல்வதற்கு பதிலாக, மலையேற்றத்திற்கு அங்கீகரிக்கப்படாத குரங்கணியிலிருந்து கொட்டக்குடி காப்புக்காடு வழியாக, 7.1 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கொழுக்குமலை தனியார் தேயிலை தோட்டத்திற்கு சென்றுள்ளனர். கொழுக்குமலையில் உள்ள தனியார் தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கும், அப்பகுதியில் உள்ள கிராம மக்களுக்கும் மட்டுமே இப்பாதையில் செல்ல அனுமதி உள்ளது. இந்தக் குழுவினர் 10.3.2018 அன்று இரவு கொழுக்குமலை தனியார் தேயிலை தோட்டத்தில் தங்கியுள்ளனர். இவர்கள் பெற்ற நுழைவுச்சீட்டு 10.3.2018 அன்று மட்டுமே செல்லத்தக்கதாகும். அன்று இரவே அந்த நுழைவுச்சீட்டு காலாவதி ஆகிவிட்டது. மேலும், இது போன்ற குழுக்கள் இப்பகுதியில் இரவில் தங்குவதற்கு அனுமதி கிடையாது. இக்குழுவினர், 11.3.2018 அன்று முன் அனுமதி ஏதுமின்றி, மலையேற்றத்திற்கு அங்கீகரிக்கப்படாத பாதையின் வழியாக கொழுக்குமலையில் தனியார் தேயிலை தோட்டத்திலிருந்து, கொட்டக்குடி காப்புகாடு வழியாக குரங்கணிக்கு சென்று கொண்டு இருந்தனர்.

இதே போன்று, சென்னையிலிருந்து 27 நபர்கள் கொண்ட மற்றொரு குழு, சென்னை மலையேற்ற சங்கம் மூலமாக குரங்கணிக்கு 10.3.2018 அன்று வந்தடைந்தனர். அங்கிருந்து வனத் துறையினரிடம் எந்தவித முன் அனுமதியும் பெறாமல், கொட்டக்குடி காப்புக்காடு வழியாக மலை ஏற்றத்திற்கு அங்கீகரிக்கப்படாத பாதையில் கொழுக்குமலை தனியார் தேயிலை தோட்டத்திற்கு சென்று, அன்றிரவு அங்கு தங்கியுள்ளனர். இந்த தனியார் தேயிலைத்தோட்டம் ஒய்வு இல்லமாக செயல்படுவதற்கு அனுமதி ஏதும் பெறப்படவில்லை என்று தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இக்குழுவிலுள்ள 27 நபர்களில், மூன்று நபர்கள் கேரளாவிற்கு சென்று விட்டனர். மற்ற 24 நபர்கள், மலை ஏற்றத்திற்கு அங்கீகரிக்கப்படாத வழிப்பாதை மூலம் கொட்டக்குடி காப்புக்காடு வழியாக 11.3.2018 அன்று மலை ஏற்றத்தை தொடங்கியுள்ளனர்.

இந்த இரண்டு குழுவினரும் 11.3.2018 அன்று கொழுக்குமலையிலிருந்து குரங்கணிக்கு செல்வதற்கு எந்தவிதமான அனுமதியும் பெறவில்லை. இவ்வாறு வரும்பொழுது, எதிர்பாராத விதமாக அன்றைய தேதியில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கிக் கொண்டனர்.

இந்த இரண்டு குழுக்கள், 10.3.2018 அன்று குரங்கணியில் இருந்து கொழுக்குமலை தனியார் தேயிலை தோட்டத்திற்கு செல்லும்போது தீ ஏதுமில்லை. அது மட்டுமல்லாமல், களத்தின் தன்மையின் அடிப்படையிலும் மற்றும் இந்திய வன நிலஅளவை நிறுவன அறிக்கையின்படியும் கொட்டக்குடி காப்புக்காட்டில் கடைசியாக தீ நிகழ்வு ஏற்பட்ட நாள் 15.2.2018 ஆகும். இத்தீ, வனத்துறையால் அணைக்கப்பட்டது. இத்தீ அணைக்கப்படவில்லை என்றால், இந்திய வன நில அளவை நிறுவனத்திடமிருந்து தொடர் எச்சரிக்கை பெறப்பட்டு இருக்கும். கடந்த பல நாட்களில், இப்பகுதிகளில் தீ நிகழ்வு குறித்து எச்சரிக்கை எதுவும் அந்நிறுவனத்திடமிருந்து பெறப்படவில்லை.

வனத் துறை களப் பணியாளர்கள் தீ நிகழ்வு ஏற்பட்டதை 11.3.2018 அன்று மதியம் 2.30 மணியளவில் கண்டறிந்தனர். திரு. முத்துப்பாண்டி, வனக் காவலர் மற்றும் மூன்று சூழலியல் மேம்பாட்டு குழு உறுப்பினர்கள் தீயினை அணைக்கும் பொருட்டு தீ நிகழ்வு ஏற்பட்ட பகுதிக்கு விரைந்து சென்றுள்ளனர். இவர்கள் இப்பகுதிக்கு மாலை சுமார் 5 மணி அளவில் சென்ற போதுதான், மலையேற்றக் குழுவினர் தீயில் சிக்கிக் கொண்டது தெரிய வந்தது. இதுமட்டுமல்லாமல், தீ விபத்தில் சிக்கிக்கொண்டவர்கள் 108

ஆம்புலன்ஸ் கட்டுப்பாட்டு மையத்திற்கும், அவர்களது உறவினர்களுக்கும் தகவல் தெரிவித்தனர்.

இதற்கிடையில், போடி வட்டத்தில் அணைக்கரைப்பட்டி பகுதியிலுள்ள சன்னியாசிபுரத்தில், தேனி மாவட்ட ஆட்சியர் தலைமையில் தீ விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், அவருக்கு அத்தீ விபத்து பற்றி தெரிய வந்தது. மாவட்ட ஆட்சித் தலைவருடன், அந்நிகழ்ச்சியில் பங்கேற்று இருந்த திரு. மகேந்திரன், உதவி வனப் பாதுகாவலர் மற்றும் இதர வனத் துறை களப் பணியாளர்களை தீ விபத்து நிகழ்ந்த பகுதிக்கு உடனடியாக விரைந்து செல்லும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டார். திரு. மகேந்திரன், பிற வனப் பணியாளர்கள் குழுவுடன் தீ விபத்து நடந்த பகுதிக்கு மாலை சுமார் 6.30 மணியளவில் சென்றார்.

இந்த தகவல் கிடைக்கப் பெற்றவுடன், மலைப்பகுதியில் சிக்கியவர்களை பத்திரமாக மீட்க அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள், வனத்துறை உயர் அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட வன அலுவலர் உள்ளிட்டோர் குரங்கணிக்கு விரைந்து சென்று, மீட்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வந்தனர்.

மலைப்பகுதியில் சிக்கியவர்களை மீட்பதற்கு ஏதுவாக தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ் ஆகியவை பணியில் ஈடுபடுத்தப்பட்டன. மற்றும் போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணியை மேற்கொள்ள அருகிலுள்ள மாவட்டங்களில் இருந்து, தீயணைப்புத் துறையினர், வனத்துறையினர், வருவாய்த் துறையினர் மற்றும் காவல் துறையினர் தேவையான உபகரணங்களுடன் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மீட்புப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகத்திடம் இருந்து, தமிழ்நாடு அரசு ஹெலிகாப்டர்களைக் கோரியது. மாண்புமிகு அம்மாவின் அரசு மீட்பு நடவடிக்கைகளை தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் 11.3.2018 அன்று இரவு முழுவதும் மேற்கொண்டது.

எனது உத்தரவின் பேரில், 12.3.2018 அன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர், சுற்றுக் சூழல் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் குரங்கணிக்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்பார்வையிட்டனர். நானும், மதுரைக்கு சென்று, தீக்காயம் அடைந்தவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினேன்.

காட்டுத் தீயில் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைப் பெற்று வரும் நபர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்க மாவட்ட நிர்வாகத்திற்கும், மருத்துவ துறையினருக்கும் நான் உத்தரவிட்டேன்.

மலை ஏற்றத்தில் ஈடுபட்ட 36 நபர்களில், 10 நபர்கள் காயமின்றி மீட்கப்பட்டனர். 17 நபர்களுக்கு பலத்த தீ காயங்கள் ஏற்பட்டது. மீதம் 9 நபர்கள் சம்பவ இடத்தியேயே இறந்து விட்டனர். இறந்தவர்களின் உடல்கள் பாதுகாப்புத் துறையின் ஹெலிகாப்டர்கள் மூலம் 12.3.2018 அன்று எடுத்து வரப்பட்டது. தீக்காயம் அடைந்தவர்களை மீட்டு, குரங்கணியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதல் உதவி அளிக்கப்பட்டு பின்னர் தேனியில் உள்ள பல்வேறு அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மிகவும் பலத்த தீக்காயம் அடைந்தவர்கள் மதுரையிலுள்ள அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை வழங்கப்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் நிஷா என்பவர் 12.3.2018 அன்று உயிரிழந்தார்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த 10 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டேன்.

மேலும், காட்டுத்தீ சம்பவம் தொடர்பாக, உரிய விசாரணை மேற்கொள்ளவும், வனத்துறையினரிடம் உரிய அனுமதி பெறாமல் மலை ஏற்றத்திற்கு அழைத்துச் சென்றவர்கள்மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கவும் நான் உத்தரவிட்டேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த 10 நபர்களின் குடும்பத்திற்கு, தலா 4 லட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும் வழங்க உத்தரவிட்டேன்.

உயரிய சிகிச்சை அளிக்கப்பட்டும், தீக்காயம் அதிகமாக இருந்த காரணத்தினால், சிகிச்சை பலனின்றி திரு விபின் என்பவரின் மனைவி திவ்யா, திரு விவேக் என்பவரின் மனைவி திவ்யா, திரு பழனிச்சாமி என்பவரின் மகள் தேவி, திரு முத்துமாலை என்பவரின் மகள் அனுவித்யா, திரு கிரி என்பவரின் மகன் கண்ணன், திரு சரவணன் என்பவரின் மனைவி சக்தியகலா மற்றும் திரு. ராமசாமி என்பவரின் மகன் திரு சதீஷ்குமார் ஆகிய 7 நபர்களும் இறந்துள்ளனர். இவர்களுக்கும், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலா 4 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும்.

விபத்து நடந்த பகுதியில், எண்ணெய் பதம் கொண்ட உயர்ந்து வளர்ந்த சுக்குநாரி புற்கள் (Lemon Grass) அதிகம் இருந்ததால், தீ மிகவும் விரைவாக பரவியுள்ளது. இக்குழுவினருக்கு தீ விபத்து ஏற்பட்டபோது, அவர்கள் மதிய உணவுக்கு பின்னர் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர்.

Top Station-ல் இருந்து குரங்கணிக்கு மலை ஏற்றம் செல்வதற்கு நுழைவுச் சீட்டு பெற்றிருந்தும், 12 நபர்கள் அங்கீகரிக்கப்படாத வேறு

பாதையில் கொழுக்குமலைக்கு செல்வது தொடர்பான தகவல் திரு. ஜெயசிங், வனவருக்கு கிடைக்கப் பெற்றது என்பது வனத் துறையின் முதற்கட்ட விசாரணையின்போது தெரிய வந்தது. அந்த வனவரும் விசாரணையின்போது இதனை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளார். எனவே, அவர் 12.3.2018 அன்றே தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அனுமதியின்றி 12 நபர்களை காப்புக்காடு பகுதிக்குள் அழைத்துச் சென்ற காரணத்தினால், போடி வட்டம், முந்தல் பகுதியைச் சேர்ந்த திரு. கணேசன் மகன் திரு. ரஞ்சித்குமார் என்பவர் மீது தமிழ்நாடு வனச்சட்டம், 1882, பிரிவு 21ன் உட்பிரிவு (டி)யின் படி, 12.3.2018 அன்று போடி வனச்சரக வனக் குற்ற எண்.13/2018ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு விதி மீறல்களுக்கு, சென்னை மலையேற்ற சங்கம் மற்றும் ஈரோட்டில் உள்ள Tour de India ஆகிய நிறுவனங்களின் மீது காவல் துறையும் சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த தீ விபத்து குறித்தும், மலையேற்ற சுற்றுலாவை ஏற்பாடு செய்யும் நிறுவனங்கள் மற்றும் வனத் துறை அலுவலர்களால் ஏற்பட்ட குறைபாடுகள் குறித்தும், மலையேற்றத்திற்கு அனுமதி வழங்குவது குறித்து மறு ஆய்வு செய்வதற்கும், எதிர்காலங்களில் இதுபோன்ற நிகழ்வு ஏற்படுவதை தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பரிந்துரைகளை வழங்கவும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை முதன்மை செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. அவர்கள், விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். இரண்டு மாத காலங்களில் அவர் தனது அறிக்கையினை சமர்ப்பிக்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது என்பதை இந்தப் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**